டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 29.9.2024 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 087 - Madurai | Online Edition

# பத்மஸ்ரீ விருதாளர் பாப்பம்மாள் மறைவு தமிழ்நாடு வேளாண்மைப்பல்கலைக்கழகம் இரங்கல்



கோயம்புத்தூர், செப்.28

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப் பாளையம் அருகே உள்ள தேக்கம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த பத்மஸ்ரீ பாப்பம்மாள் அம்மா 1914 ஆம் ஆண்டு பிறந்தார். இயற்கை விவசாயம், ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்கம் கொண்ட பத்மஸ்ரீ பாப்பம்மாள் அம்மா, வயது மூப்பின் காரணமாக 27.9.24 அன்று அவரது இல்லத்தில் காலமானார். இயற்கை வேளாண்மையில் ஆற்றிய பங்களிப்புக்காக இந்தியாவின் குடிமக்களுக்கு வழங்கப்படும் விருதுகளில் நான்காவது மிக உயர்ந்த விருதான பத்மஸ்ரீ விருதினை 2021 ஆம் ஆண்டில் இவருக்கு வழங்கி இந்திய அரசு பெருமைப்படுத்தியது.

இவர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் நீண்ட நெடிய நெருங்கிய தொடர்பு கொண்டவர். மேலும், விரிவாக்கக் கல்வி இயக்ககத்தின் உழவர் விவாதக் குழு அமைப்பாளராக இருந்து பல்லாயிரம் விவசாயிகளுக்கு பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பங்கள் சென்றடைய வழிவகை செய்துள்ளார்.

பல்வேறு பயிற்சிகள், நிகழ்ச்சிகள், உழவர் தின விழாக்கள் ஆகிய நிகழ்வுகளில் பங்கு கொண்டு பல்கலைக்கழகத்தின் பாராட்டுதல்களையும், விருதுகளையும் பெற்றுள்ளார். பெண்கள் முன்னேற்றத்திற்கும், வேளாண் வளர்ச்சிக்கும் ஆற்றிய தொண்டு அளப்பரியது.

இவருடைய இழப்பு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு மட்டுமல்லாமல் அனைத்து தரப்பினருக்கும் பேரிழப்பாகும். இவருடைய ஆன்மா சாந்தியடைய அனைவரின் சார்பிலும் இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கிறோம்.

# திருச்சியை பன்னாட்டு வேளாண் ஏற்றுமதி மையமாக்க கலந்துரையாடல் நிகழ்வு நடந்தது



திருச்சி, செப்.28

தேசிய வாழை ஆராய்ச்சி மையம் மற்றும் தமிழக அரசின் தமிழ்நாடு வேளாண் உணவு பதப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு கழகம் இணைந்து ஏற்பாடு செய்த உற்பத்தியாளர் மற்றும் ஏற்றுமதியாளர் சந்திப்பு தேசிய வாழை ஆராய்ச்சி மையத்தில் செப்டம்பர் 27ல் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், விவசாயிகள், உற்பத்தியாளர்கள், தொழில் முனைவோர்கள், ஏற்றுமதியாளர்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவன பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர். தமிழகத்தில் ஏற்றுமதி பெருக்குவதற்கான உத்திகள் பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டது. ஏற்றுமதி மேம்பாட்டு கழகம் தமிழகத்தில் ஏற்றுமதிக்கு உள் கட்டமைப்பை உருவாக்குதல், விவசாய ஏற்றுமதி தரத்தை மேம்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைந்த ஏற்றுமதி கட்டமைப்புகளை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நிறுவனங்களுக்கு செய்து தர முடிவெடுத்துள்ளது. கிழக்கு, ஆசியா மற்றும் மேற்கு ஆசியா சந்தைகளை தவிர்த்து அமெரிக்கா, ஐரோப்பா, ஜப்பான், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய தேவையான கட்டமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் இடையான இணைப்புகளை ஏற்படுத்துதல் குறித்து கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஏற்றுமதி மேம்பாட்டு கழகத்தின் தலைமை நிர்வாக அதிகாரி முனைவர் கே.அழகுசுந்தரம் கூறுகையில், 2030-க்குள் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை எட்ட வேண்டும் என்ற தமிழக அரசின் லட்சிய இலக்கை அடைய, ஏற்றுமதி செய்யக்கூடிய, தேவை அடிப்படையிலான வேளாண் பொருட்களைக் கண்டறிவதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். புதிய சந்தைகள் மற்றும் பல்வேறு விவசாயப் பொருட்களுக்கான நடைமுறைகள், டெல்டா பகுதியிலிருந்து ஏற்றுமதி வர்த்தகத்தை அதிகரிக்க தொகுப்பு அடிப்படையிலான ஏற்றுமதி மையங்கள், கதிர்வீச்சு வசதிகள், நானோ செயலாக்க வசதிகள் போன்ற அரசாங்க முயற்சிகளை விரிவாகக் கூறினார். தேசிய வாழைய ஆராய்ச்சி மையத்தின் இயக்குனர் முனைவர் ரா.செல்வராஜன், பாரம்பரிய மற்றும் புவிசார் குறியீடு கொண்ட வாழை ரகங்கள்

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட வாழை பொருள்களின் ஏற்றுமதி வாய்ப்புகளை பற்றி கூறினார். மலை வாழைப்பழம், வாழைக்காய் சிப்ஸ் போன்ற பொருள்களுக்கான ஏற்றுமதி வாய்ப்புகளை அடிக்கோடிட்டு காட்டினார்.

திருச்சி சர்வதேச விமான நிலையத்தின் இயக்குனர் ஜி கோபால கிருஷ்ணன், திருச்சி விமான நிலையத்தில் உள்ள விமான சரக்கு வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு ஏற்றுமதியாளர்களைக் கேட்டுக்கொண்டார். விமான நிலையத்தின் திறன் மற்றும் வேளாண் பொருட்கள் ஏற்றுமதியை கையாள்வதற்கான அதன் உள் கட்டமைப்பு வசதிகள் குறித்தும் விளக்கினார்.

அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரியின் முதல்வர் முனைவர் சி. வன்னியராஜன், வேளாண் ஏற்றுமதிக்கு உகந்த அரிசி ரகங்களை பற்றி விரிவாக எடுத்துரைத்தார். வேளாண்மை பல்கலைக்கழகத்தின் வேளாண் வணிக மைய இயக்குனர் முனைவர் இ.சோமசுந்தரம், வணிக மையத்தில் தொழில் முனைவோருக்கு உள்ள வசதிகள் மற்றும் உணவு பொருட்களை மூன்று ஆண்டுகள் வரை நீட்டிக்க உதவும் ரிடார்ட் தொழில் நுட்பத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். தமிழ்நாடு வாழை உற்பத்தியாளர் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் ஜி.அஜிதன், தாவர சுகாதாரம் மற்றும் தனிமைப்படுத்தல் விதிமுறைகள், உள்ளூர் மொழிகளில் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட வேண்டும் என்றும் இது விவசாயிகளுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்றும் கூறினார். மத்திய உணவு பதனிடுதல் மையத்தின் முனைவர் என் வெங்கடாசலபதி, வேளாண் பொறியியல் கல்லூரியின் முதல்வர் பி ராஜ்குமார், திருச்சி நபார்டு வங்கியின் பொது மேலாளர் மோகன் கார்த்திக், தாவர சுகாதாரத் துறையின் உதவி இயக்குனர் எஸ் சிவராமகிருஷ்ணன், திருச்சி தொழில் மையத்தின் பொது மேலாளர் எம் ராமலிங்கம் தங்கள் நிறுவனங்களின் புதுமையான முயற்சிகள் பற்றி விவரித்தனர்.

இந்நிகழ்ச்சியில் 150-க்கும் மேற்பட்ட விவசாயப் பொருள் ஏற்றுமதியாளர்கள், தொழில்முனைவோர், உழவர் உற்பத்தியாளர் நிறுவன மற்றும் மகளிர் சுய உதவி குழு பிரதிநிதிகள், மத்திய மற்றும் மாநில அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் வாழை ஆராய்ச்சி மைய விஞ்ஞானிகள், அறிஞர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். டாக்டர் கே.என்.சிவா வரவேற்றார், டாக்டர் பி.சுரேஷ்குமார் நன்றியுரை வழங்கினார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

Stanes




பயோ நெமட்டான்

பயிரின் வேர்களை தாக்கும் நூற்புழு பிரச்சனையா?

# பயன்படுத்துவீர்...

# பயோ நெமட்டான்

# "நூற்புழுக்களின் எதிரி"

**இது வேர்களைத் தாக்கும் தீமை செய்யும் நூற்புழுக்களையும் அதன் முட்டைகளின் செயல்பாட்டையும் தடுக்கிறது.**

- அரோக்கியமான வேர் வளர்ச்சிக்கு உதவுகிறது.
- பூஞ்சாண (அ) பாக்டீரியா நோய்கள் வரும் அபாயத்தை குறைக்கிறது.
- மேலும் நல்ல மகசூல் கிடைக்க வழிவகை செய்கிறது.

வேர் முடிச்சுகள்



வேர் வீக்கம்



வேர் அழுகல்



டி ஸ்டேன்ஸ் அண்ட் கம்பெனி லிமிடெட்
8/23-24, ரேஸ் கோர்ஸ்,
கோவை-641018.
www.tstanes.com

84899 04949
தமிழ்நாடு மேலாளர் : 91 93449 14955
கோவை, ஈரோடு : 91 93449 14956
சேலம் : 91 93449 14948 திருச்சி : 91 93449 14943
மதுரை : 91 93449 14935 வேலூர் : 91 93449 14938

# டிஜிட்டல் பண பரிவர்த்தனை வசதி அறிமுகம்

ஈரோடு, செப்.28

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர், பொ.யசோதா தெரிவித்துள்ள செய்தியில் வட்டார வேளாண்மை விரிவாக்க மையம் மற்றும் துணை வேளாண்மை விரிவாக்க மையங்களில் விவசாயிகளுக்கு தேவையான இடுபொருட்களான விதை நெல், உளுந்து, மக்காச்சோளம், நிலக்கடலை, உயிர் உரங்கள், நுண்ணூட்ட உரங்கள், ஜிங்க் சல்பேட், டிரைக்கோ டெர்மா விரிடி, சூடோமோனாஸ், மெட்டாரைசியம் உள்ளிட்ட அனைத்து இடுபொருட்களும் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

இதற்கு முன்பு வரை விவசாயிகள் வாங்கும் இடுபொருட்களுக்கு ரொக்கமாக பணம் செலுத்தும் முறையே இருந்து

விவசாய நண்பர்களே ...
விவசாயம் சம்பந்தமாக உங்கள் சந்தேகங்களுக்கு...
ரிலையன்ஸ் பவுண்டேசனின்
கட்டணமில்லா உதவி தொலைபேசி எண்ணில் விளக்கம் பெறலாம்
1800-419-8800
Reliance Foundation

வந்தது. ஆனால் தற்சமயம் மாறி வரும் சூழலுக்கு ஏற்ப விவசாயிகள் தாங்கள் வாங்கும் இடுபொருட்களுக்கு டிஜிட்டல் முறையிலான ஏடிஎம் கார்டு,டெபிட் கார்டு, கிரெடிட் கார்டு ,நெட் பேங்கிங், கூகுள் பே, போன் பே,பே டி எம் போன்ற அனைத்து மின்னணு பரிவர்த்தனைகள் மூலம் இடுபொருட்களுக்கு பணம் செலுத்தலாம். மின்னணு பரிவர்த்தனை மேற்கொள்வதற்கு தேவையான அனைத்து வசதிகளும் பவானிசாகர் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வாய்ப்பினை விவசாயிகள் பயன்படுத்தி தாங்கள் வாங்கக்கூடிய பொருட்களுக்கான தொகையை டிஜிட்டல் பரிவர்த்தனை மூலம் செலுத்தி பயனடையுமாறு பவானிசாகர் வேளாண்மை உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் — 28.09.2024

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 30 | 34 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 30 | 35 | 57 | உருளை (பிற) | 36 | 40 |
| 1B | கத்திரி(Nadu) | 45 | 50 | 57A | உருளை(ஊட்டி) | 44 | 50 |
| 2 | வெண்டை | 28 | 32 | 58 | மேரக்காய் | 20 | 24 |
| 3 | தக்காளி (நாடு) | 32 | 35 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 28 | 32 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 29 | 32 | 60 | கேரட் | 45 | 50 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 35 | 38 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 40 | 46 |
| 6 | புடலை | 25 | 28 | 62 | நூல்கோல் | 40 | 46 |
| 7 | பீர்க்கன் | 25 | 30 | 63 | டர்னிப் | 45 | 50 |
| 8 | சுரைக்காய் | 18 | 22 | 64 | மு.கோஸ் | 18 | 22 |
| 9 | பாகற்காய் | 30 | 34 | 65 | மு.கோஸ்(கலர்) | 30 | 35 |
| 10 | கொத்தவரை | 25 | 28 | 66 | காளிபிளவர் | 45 | 50 |
| 11 | பூசணி | 12 | 16 | 67 | பட்டாணி | 190 | 200 |
| 12 | அரசாணி | 12 | 16 | 68 | பூண்டு | 260 | 314 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 25 | 28 | 69 | இஞ்சி | 50 | 136 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 28 | 32 | 70 | புருக்கோலின் | 100 | 120 |
| 15 | சி.வெங்காயம் | 45 | 50 | 71 | பென்னி பீன்ஸ் | 50 | 56 |
| 16 | பெ.வெங்காயம் | 46 | 60 | 72 | குடமிளகாய் | 48 | 55 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 25 | 30 | 73 | ஊட்டி அவரை | 130 | 145 |
| 18 | பச்சை மொச்சை | 45 | 48 | 74 | பஜ்ஜி மிளகாய் | 40 | 45 |
| 19 | முருங்கை | 70 | 78 | 71A | | | |
| 20 | தேங்காய் | 56 | 60 | | | | |
| 21 | | | | | | | |
| 22 | வாழைக்காய் | 35 | 40 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 60 | 65 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 90 | 95 | 75 | எலுமிச்சை | 125 | 135 |
| 25 | சேப்பங்கிழங்கு | 55 | 58 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 50 | 65 |
| 26 | மரவள்ளி | 28 | 32 | 77 | | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 50 | 55 | 78 | பப்பாளி | 35 | 40 |
| 28 | கறிவேப்பிலை | 38 | 42 | 79 | மாதுளை | 200 | 240 |
| 29 | கொத்தமல்லி | 58 | 62 | 80 | திராட்சை | 80 | 90 |
| 30 | புதினா | 9 | 10 | 81 | மாம்பழம் | 100 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் / காலா | 200 | 240 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்சு | 90 | 100 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயம் | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 40 | 45 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 60 | 70 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 50 | 55 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 65 | 70 |
| 40 | கோவக்காய் | 25 | 28 | 91 | பூவன் | 45 | 50 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 55 | 60 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 55 | 60 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 18 | 22 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 30 | 35 | 96 | நேந்திரன் | 30 | 35 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 25 | 28 | 97 | செவ்வாழை | 80 | 85 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 60 | 66 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 80 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 35 | 40 | | | | |

# சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சி

திருச்சி, செப்.28

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் திருச்சி, சிறுகமணி, வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் பல்வேறு பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப் பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்கும் நோக்கில் இயற்கை விவசாயத்தில் ஈடுபடு பவர்கள், இயற்கை இடுபொருட்களை தயாரிப்பவர்கள் மற்றும் சந்தைப்படுத்துபவர்களை ஒருங்கிணைத்து இயற்கை வேளாண்மை கருத்தரங்கு மற்றும் கண்காட்சி ஒவ்வொரு மாதமும் நடத்தப்பட உள்ளது.

இந்த நிகழ்ச்சியானது ஒவ்வொரு மாதமும் முதல் வாரம் செவ்வாய்க்கிழமை சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலைய வளாகத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன் முதல் நிகழ்ச்சியானது, அக்டோபர் முதல் செவ்வாய்க்கிழமையான 1.10.24 அன்று தொடங்க உள்ளது.

இக்கருத்தரங்கில் இயற்கை வேளாண்மை, இயற்கை இடுபொருட்கள் தயாரித்தல், சத்துமிகு காய்கறி தோட்டம், இயற்கை பொருட்களை சந்தைப்படுத்துதல் போன்ற தலைப்புகளின் கீழ் தொழில்நுட்ப வல்லுநர்களால் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட உள்ளது.

மேலும் இயற்கை இடுபொருள்களை சந்தைப்படுத்துவதற்கும், அவற்றை விவசாயிகளுக்கு எளிதில் கிடைக்கச் செய்யும் வகையிலும் இயற்கை இடுபொருட்கள் உற்பத்திசெய்பவர்கள் மூலம் கண்காட்சி அமைக்கப்பட உள்ளது. இதன் மூலம் விவசாயிகளுக்கு இயற்கை இடுபொருட்களை வாங்குவதற்கான வாய்ப்பினை எளிதாக்குவதோடு டுபொருட்களை விவசாயி களிடம் சந்தைப்படுத்துவதில் பெரிதும் உதவுகிறது.

ஆர்வமுள்ள இயற்கை விவசாயிகள், இயற்கை இடுபொருள்கள் தயாரிப்போர் மற்றும் சந்தைப்படுத்துவோர் இந்நிகழ்ச்சியில் பங்கு பெற்று பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தொழில்நுட்பங்கள் மற்றும் இடுபொருட்கள் பற்றிய தகவல்களை தெரிந்து பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும் விவரங்களுக்கு 0431-2962854, 91717 17832 என்ற எண்ணை அலுவலக நேரத்தில் (காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை) தொடர்பு கொண்டு முன் பதிவு செய்யவும். மேற்கண்ட தகவல்களை வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜாபாபு தெரிவித்தார்.



# இயற்கை வேளாண்மை குறித்த வெளிமாநில அளவிலான விவசாயிகள் கண்டுணர்வு பயணம்




மதுரை, செப்.28

மதுரை மாவட்டம், கள்ளிக்குடி வட்டாரம், வேளாண்மைத் துறையின் வேளாண்மைத் தொழில்நுட்ப மேலாண்மை முகமைத் திட்டத்தின் கீழ் இயற்கை வேளாண்மை குறித்த வெளிமாநில அளவிலான விவசாயிகள் கண்டுணர்வு பயணமானது கர்நாடகா மாநிலம், இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், காந்தி கிசான் விக்யான் கேந்திரா மற்றும் இயற்கை விவசாய ஆராய்ச்சி நிலையம் ஆகிய இடங்களில் 23.9.24 முதல் 27.9.24 வரை பயணம் மேற்கொள்ளப்பட்டது. இந்த விவசாயிகள் கண்டுணர்வு பயணத்தில் கள்ளிக்குடி, திருமங்கலம், வாடிப்பட்டி, அலங்கா நல்லூர் ஆகிய பகுதிகளை சேர்ந்த 20 விவசாயிகள் பயணத்திற்கு அழைத்துச் செல்லப் பட்டனர். இந்திய தோட்டக் கலை ஆராய்ச்சி நிலையத்தில் சங்கர், இயற்கை வேளாண்மையில் காய்கறி பயிர்களின் சாகுபடி குறித்தும், இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்திலிருந்து தக்காளி, மிளகாய், கத்தரி, வெங்காயம், பீர்க்கன், சுரை, பூசணி, போன்ற காய்கறி பயிர்களில் அதிக விளைச்சல் தரக்கூடிய இரகங்களை இயற்கை முறையில் சாகுபடி செய்வது பற்றிய காணொலி மூலம் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

பழப்பண்ணை மற்றும் நாற்றாங்கால் பண்ணை விவசாயி களுக்கு காண்பிக்கப்பட்டது. காந்தி கிசான் விக்யான் கேந்திராவில் ஜெகதீஷ், பஞ்சகாவ்யா தயாரிக்கும் முறை களையும், மண்புழு உரம் தயாரிக்கும் முறைகளையும் விவசாயி களுக்கு செயல்விளக்கமாக எடுத்துரைத்தார். வெங்கடேஷ், இயற்கை முறையில் களைகளை கட்டுப்படுத்தும் முறை களையும் அதற்கான இயற்கை களைக்கொல்லிகள் தயாரிப்பு முறைகள் பற்றியும் விளக்கினார். ஏகலைவா ஹடெக் நர்சரி பண்ணையில் தென்னை நார் கழிவு மூலம் காய்கறி மற்றும் பழங்கள் நாற்றாங்கால் தயாரிக்கும் தொழில் நுட்பம் விவசாயிகளுக்கு காண்பிக்கப்பட்டது.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# பட்டதாரி இளைஞர்களை வேளாண் தொழில் முனைவோராக்கும் திட்டம்

விருதுநகர், செப்.28

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாரம், வேளாண்மை துறையில் மாநில வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் பட்டதாரி இளைஞர்களை வேளாண் தொழில் முனை வோராக்கும் விதமாக 2024-25ம் ஆண்டில் பட்டதாரி இளை- ஞர்களுக்கு வங்கி கடன் உதவியுடன் கூடிய ஏதாவது ஒரு வேளாண் சார்ந்த தொழில் தொடங்குவதற்காகப் ஒருவருக்கு அதிகபட்சமாக ரூ.ஒரு லட்சம் மானியம் வழங்கபட உள்ளது.

**இத்திட்டத்தில் பயன் பெறுவதற்கான தகுதிகளும் நிபந்தனை களும் பின்வருமாறு :**

1) வயது வரம்பு 21- 40 வயது வரை இருத்தல் வேண்டும்.

2) கல்வித்தகுதி - இளங்கலை பட்டய படிப்பு பெற்றிருக்க வேண்டும்.

3) அரசு மற்றும் தனியார் நிறுவனத்தில் பணியில் இருக்கக் கூடாது.

4) விண்ணப்பதாரர் கணினித்திறன் பெற்றிருக்க வேண்டும்.

5) ஒரு குடும்பத்திற்கு ஒரு பட்டதாரி மட்டுமே நிதி உதவி பெற தகுதி உடையவர்.

6) வங்கி மூலம் கடன் பெற்று தொழில் புரிவோர் நிறுவனத்தின் உரிமையானது தனி உரிமையாக இருக்க வேண்டும்.

7) பயனாளி தனது மூலதனத்தில் வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த பிரதம மந்திரியின் உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டம் (PMFME) / வேளாண் உள்கட்டமைப்பு நிதியின் கீழ் அனுமதிக்க கூடிய திட்டங்களின் அடிப்படையில் சுய தொழில்கள் நிறுவ வேண்டும்.

8) வங்கி கடன் உதவியுடன் கூடிய தொழில்களுக்கு மட்டுமே அனுமதி. இத்திட்டத்தில் தேர்வு செய்யப்படும் பயனாளிகள் மானியத் தொகை போக மீதமுள்ள தொகைக்கு வங்கி கடன் உதவி பெற்றதற்கான சான்றிதழைக் கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும்.

**தேவையான ஆவணங்கள்**

1) 10 மற்றும் 12 ஆம் வகுப்பு சான்றிதழ்.

2) பட்டப்படிப்புச் சான்றிதழ்

3) ஆதார் அட்டை

4) குடும்ப அட்டை

5) பயனாளியின் வங்கிக் கணக்கு புத்தகம்.

6) வங்கியிடம் இருந்து பெறப்பட்ட கடன் ஒப்புதல் ஆவணம்.

7) தொடங்கவுள்ள தொழில் குறித்த விவரங்கள்.

மேற்கண்ட ஆவணங்களை இத்திட்டத்தில் பயனாளிகள் சமர்ப்பிக்க வேண்டும். மேலும் இத்திட்டத்தில் பயனடைய விரும்பும் தகுதியுள்ள பயனாளிகள் ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாரத்தில் உள்ள வேளாண் விரிவாக்க மையத்தில் வேளாண்மை உதவி இயக்குனர் கு.தனலட்சுமியை தொடர்பு கொள்ள கேட்டு கொள்கிறோம்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



# நாய் வளர்க்க தனி கட்டுபாடு விதிமுறைகள் தெரியுமா?

பெரும் நகரங்களாக இருந்தாலும் சரி, கிராமப்புறங்களாக இருந்தாலும் சரி, தற்போதைய காலகட்டத்தில் நாய் வளர்ப்பு என்பது ஒரு சிறந்த பொழுது போக்கு அம்சமாக உள்ளது. முன்பெல்லாம் கிராமப்புறங்களில் விவசாயிகள் தங்களுடைய தோட்டங்களில் காவலுக்காகவும் முயல் போன்ற விலங்கு களை வேட்டையாட நாட்டு இன நாய்களை (இராஜபாளையம், சிப்பிப்பாறை, கோம்பை, கன்னி) வளர்த்து வந்தனர்.

நாய்களின் பெருக்கம் கார்த்திகை மாதம் வந்தாலே அதிக மாகும். தற்போது தெரு நாய்களின் தொல்லை வேறு, தினமும் அரசு மருத்துவமனைகளில் நாய்களால் கடிப்பட்டவர் களுக்கு தடுப்பூசி போட வரிசையாக மக்கள் காத்திருக் கின்றனர். இது ஒருபுறம் இருக்க, நகர்ப்புறங்களில் நாய்களை கூட்டிக் கொண்டு பொது இடங்கள், பூங்காக்களில் மக்கள் உலா வருகின்றனர். இதனால் சில சமயங்களில் நாய்கள் தங்களுடைய எஜமானர் களின் கட்டுபாட்டை மீறி சிறுவர், சிறுமிகளை கடித்து விடுகின்றது. இதை எல்லாம் கவனித்த தமிழக அரசு நாய் வளர்ப்புகென தனி கொள்கை முடிவை (RULS & REGULATIONS) நேற்று வெளியிட்டது.

அதில் என்ன விதிமுறைகள் கடைபிடித்தால் நாய்கள் வளர்க்க உரிமம் பெற முடியும் என்று விரிவாக தெரிவித்து உள்ளது.

**நாய் வளர்ப்பதான கொள்கை 2024? என்ன என்ன சொல்லுகிறது ? எப்படி உரிமம் பெறுவது ?**

1) நாய் வளர்க்க விரும்புவோர் அதற்கான உரிமத்தை (LICENSE) சம்மந்தப்பட்ட உள்ளாட்சி (PANCHAT, CORPORATION) வரை விண்ணப்பித்து பெற வேண்டும்.

2) அத்துடன் அல்லாது தமிழ்நாடு விலங்குகள் நல வாரியத்திடமிருந்து உரிமம் பெற விண்ணப்பித்து அவர்களின் உரிமம் பெற வேண்டும்.

3) உரிமம் பெற்ற அனைவரும் அதனை தங்களுடைய வசிப்பிடத்தில் பிறர் பார்க்கும் வகையில் (DISPLAY) உரிமத்தை காட்சிப்படுத்த பட வேண்டும். மூடி மறைக்க க்கூடாது.

**பதிவு கட்டணம் எவ்வளவு தெரியுமா?**

நாய் வளர்க்க விரும்புவோர் விண்ணப்பத்துடன் அதற்குரிய ஆவணங்களுடன் பதிவு கட்டணமாக ரூ,5000/ செலுத்த வேண்டும்.

இது வெளிநாட்டு இன நாய்களுக்கு மட்டும். அதுவே உள் நாட்டு நாய்களாக இருந்தால் (COUNTRY BREED) பதிவுக்கான கட்டணம் பாதியாக ரூ.2500/– குறைக்கப்பட்டுள்ளது. பதிவிற்கான காலம் இரண்டு ஆண்டுகள் மட்டும். அதற்கு பிறகு புதுப்பிக்க வேண்டும்.

**நாய் வளர்க்க விரும்புவோருக்கு வயது வரம்பு உண்டா?**

நாய் வளர்க்க விரும்புவோரின் வயது வரம்பு 18ஆக இருக்க வேண்டும். அதற்கு குறைவான வயதினர்களுக்கு உரிமம் வழங்க படாது. இது நாய் வளர்ப்பவர்கள், நாய் நர்சரி வைத்து குட்டிகளை விற்பனை செய்ய விரும்புவோருக்கும் பொருந்தும்.

**நாய் வளர்க்க என்ன செய்ய வேண்டும்?**

நாய் வளர்க்ககூடிய இடங்களை தமிழ்நாடு விலங்கு நல வாரியத்தை சேர்ந்தவர்களால் ஆண்டுக்கு ஒரு முறை ஆய்வு (INSPECTION) நடத்திடப்படும். வளர்ப்பதற்கான உரிமம் 2 ஆண்டுக்கு ஒரு முறை வழங்கப்படும். உரிமத்தின் காலக்கெடு முடிந்த பின் 1 மாதத்திற்குள் அதை புதுப்பிக்க வேண்டும் (RENEWAL). அப்படி செய்யாத பட்சத்தில் காலாவதியான நாளிலிருந்து 1 நாளுக்கு 500 வீதம் அபராதம் விதிப்படும் (PENALTY).

**நாய் வளர்ப்போருக்கான அறிவுறுத்தல் என்ன தெரியுமா?**

1) நாய்களின் உடல் சுகாதாரம் மற்றும் ஆரோக்கியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். நாய்களின் இனப்பெருக்கம் ஊட்டசத்து, உடல் நலன்கள் ஆகியவற்றை கால்நடை மருத்துவர் மூலமாக PERIDICAL CHECK UP) கண்காணிக்க வேண்டும்.

2) ஒரு முறை குட்டி ஈன்ற நாய் அடுத்த 12 மாதங்கள் கழித்தே குட்டிகளை ஈனும் வகையில் பெண் நாயின் நலனை பாதுகாக்க வேண்டும்.

3) 8 ஆண்டுகளுக்கு மேலுள்ள நாய்களுக்கு உரிமம் வழங்கப் படாது. ஆண் நாய்களாக இருந்ததால் 10 முதல் 12 ஆண்டுகளாக இருந்தாலும் கூட அவற்றின் உடல் திறன் மற்றும் ஆரோக்கிய அடிப்படையில் உரிமம் தரப்படும் அல்லது தள்ளுபடி செய்யப் படும். என்ன சாதாரண நாய் வளர்ப்புக்கு இவ்வளவு கட்டுப் பாடுகள் விதிமுறைகளா? என்று நீங்க கேட்பது காதில் ஒலிக்கிறது. எந்த ஒரு தொழிலாகவும், வளர்ப்பாக இருந்தாலும் சரி, கட்டு பாடுகள் இருந்தால் தான், அவை ஆரோக்கியமாகவும் மற்றவர் களுக்கு இடையூறாக இல்லாமல் இருக்கும் என்பதில் மாற்றுக் கருத்து உண்டா?

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# மானாவாரியில் மக்காச்சோளம் சாகுபடி

தானிய பயிர்களில் மக்காச்சோளம் ஒரு முக்கிய பயிராகும். இது அனைத்து மண்வகைகளிலும் வளர்ந்து விளைச்சல் தரக்கூடிய ஒரு பயிராகும். நிலத்தில் முதல் உழவிற்கு பின் ஏக்கருக்கு 5 டன் தொழுஉரம் அல்லது மக்கிய தேங்காய் நாரை சமமாகக் இட்டு, அதனுடன் 800 கிராம் (4பாக்கெட்) அசோஸ்பைரில்லம் கலந்து பின் நன்கு உழுது மண்ணை புழுதியாக்க வேண்டும்.

மானாவாரி மக்காச்சோளத்திற்கு 45 செ.மீ இடைவெளியில் பார் அமைக்க வேண்டும். ஏக்கருக்கு 5 கிலோ நுண்ணூட்டக் கலவையை 15 கிலோ மணலுடன் கலந்து விதைக்கும் முன் சாலில் இட்டு பின்பு விதைப்பு செய்ய வேண்டும்.

மக்காச்சோளம் மானாவாரியாக ஆடி (ஜூன் - ஜூலை) மற்றும் புரட்டாசி (அகஸ்ட் - செப்டம்பர்) ஆகிய பட்டங்களில் பயிரிடப்படு கிறது. வீரிய ஒட்டு இரகங்களான கோ.எச் (எம்)6 மற்றும் கோ.எச். (எம்) 8 பயிர் செய்து அதிக விளைச்சல் பெறலாம். நல்ல தரமான விதைகளை தேர்வு செய்ய வேண்டும். வீரிய ஒட்டு இரகம் என்றால் ஏக்கருக்கு 8 கிலோ போதுமானது. மேலும், செடிக்கு செடி 20 செ.மீ. இடைவெளியில் ஒரு குழிக்கு ஒரு விதை என்ற அளவில் பாரின் பக்கவாட்டில் 4 செ.மீ ஆழத்தில் விதைகளை ஊன்றி விதைப்பு செய்ய வேண்டும். விதை முளைக்காத இடத்தில் தண்ணீரில் ஊற வைத்த விதைகளை 7-10வது நாளில் விதைக்க வேண்டும்.

உரத்தை பொறுத்தவரையில் தழை, மணி, சாம்பல் சத்துக்களை மண்பரிசோதனை செய்து அதன் அடிப்படையிலோ அல்லது பொது பரிந்துரையான ஏக்கருக்கு 60:30:30 (செம்மண்), 40:20:10 (களிமண்) கிலோ தழை, மணி, சாம்பல் சத்துக்கள் என்ற விகிதத்தில் அளிக்க வேண்டும். அடியுரமாக கால் பகுதி தழைச்சத்து, முழு அளவு மணி மற்றும் சாம்பல் சத்து விதைப்பதற்கு முன் இடவேண்டும். மீதமுள்ள தழைச்சத்தை விதைத்த 25 வது நாளில் பாதியளவும், 45வது நாளில் கால் பகுதியும் இடவேண்டும்.

மக்காச்சோள பயிரின் இடையில் ஊடுபயிராக செம்மண்ணில் தட்டைப்பயிர் அல்லது உளுந்தும், கரிசல் மண்ணிற்கு துவரையும் ஊடுபயிராக சாகுபடி செய்யலாம். களைக்கொல்லி பயன்பாட்டை பொறுத்தவரையில் மண்ணில் ஈரம் இருக்கும் பொழுது தெளிக்க வேண்டும். சமீபகாலமாக வீரிய ஒட்டு இரகங்கள் அதிக அளவில் நோய் மற்றும் பூச்சி தாக்குதலுக்கு உள்ளாவதால் அவற்றை கட்டுப்படுத்தும் முறைகளை கடைப்படித்தல் அவசியம்.

அறுவடைக்கு தயாராகும் மக்காச்சோளக் கதிரின் மேல் தோல் பழுத்து முதிர்ந்தவுடன் காயந்து விடும். விதைகள் கடினமாகவும், காய்ந்தும் காணப்படும். இப்பருவம் அறுவடைக்கேற்றது. விதைகளை 10 முதல் 12 சதவீதம் ஈரப்பதம் வரும் வரை நன்கு உலர வைக்க வேண்டும். மக்கச்சோளப் பயிர்களை பயிரிட விரும்பும் விவசாயிகள் தங்கள் இருப்பில் உள்ள விதைகளை முளைப்புத் திறன் பரிசோதனை செய்து பயன் பெறுமாறு திருநெல்வேலி, நிருபர் காலணியில் செயல்படும் விதை பரிசோதனை ஆய்வக வேளாண்மை அலுவலர் ஜெ.பி.சஜிதா கேட்டுக் கொள்கிறார்.



# உழவர் தின விழாவிற்கு விவசாயிகள் கண்டுணர்வு பயணம்

சேலம், செப்.28

சேலம் மாவட்டம், வீரபாண்டி, மகுடஞ்சாவடி, கொங்கணாபுரம், எடப்பாடி மற்றும் சங்ககிரி வட்டாரத்தை சார்ந்த தலா 10 வீதம் மொத்தம் 50 விவசாயிகள் அட்மா திட்டத்தில் மாநில அளவில கண்டுணர்வு பயணமாக தமிழக அரசின் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் ஆகியவை இணைந்து கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் மாநில அளவிலான மாபெரும் உழவர் தின விழா கண்காட்சியை காண சென்றனர்.



கண்காட்சியில் தொழில்நுட்ப கருத்தரங்குகள், செயல் விளக்கங்கள், புதிய பயிர் ரகங்கள், பயிர் ஊக்கிகள், பூச்சி நோய் எதிர்ப்பு காரணிகள், அங்கக வேளாண் இடுபொருட்கள், நானோ தொழில்நுட்பங்கள், மதிப்பூட்டல் தொழில்நுட்பங்கள், டிஜிட்டல் வேளாண்மை, நீர் பாசன கருவிகள் ஆகியவற்றை நேரில் கண்டும், மேலும் விவசாய திட்டங்கள் மற்றும் சேவைகள் , புதிய தொழில் உத்திகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் பொருட்கள் சந்தைப்படுத்துதல் குறித்த கருத்தரங்கம், விவசாயிகள் விஞ்ஞானிகள் கலந்துரையாடல் ஆகிய நிகழ்ச்சியில் விவசாயிகள் கலந்து கொண்டும் பயன்பெற்றனர்.

அட்மா திட்ட அலுவலர்கள் கே.ராஜேந்திரன், தீபன் முத்துசாமி, எஸ்.மகேந்திரன், எம்.மோகன்ராஜ், மா.சதீஸ்குமார் மற்றும் கே.இளையராஜா ஆகியோர் பயிற்சி ஏற்பாடுகளை செய்து இருந்தனர் என்று வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி ஒரு அறிக்கையில் கூறியுள்ளார்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# டிரைக்கோடெர்மா அஸ்பெரில்லம் - இயற்கை பூஞ்சாணக் கொல்லி

விவசாயத்தில் பொருத்தவரை விவசாயிகளுக்கு எதிரியாகவும் பயிர்களுக்கு பாவியாகவும் உள்ளன பலவிதமான நோய்கள். இயற்கை வேளாண்மையைப் பொருத்தவரை இவ்விதமான நோய் களைக் கட்டுப்படுத்துவதில், உயிரி பூஞ்சாண் கொல்லியான டிரைக்கோடெர்மா அஸ்பெரில்லத்தின் பங்கு இன்றியமையாத ஒன்றாகும். பயிர்களில் மண், நீர் மற்றும் விதைகள் மூலமாக பரவும் வேர் அழுகல் மற்றும் வாடல் நோய்களைக் கட்டுப்படுத்துவதில் இது முக்கியப் பங்காற்றுகிறது.

## நன்மைகள்

இது வேர்களில் வளர்ந்து மற்ற நோய் உண்டாக்கக்கூடிய பூஞ்சாணங்களை வளராமல் தடுத்து விடுகிறது. இதனை அனைத்து பயிர்களுக்கும் பயன்படுத்தலாம். எல்லாப் பயிர்களிலும் உண்டாகும் வேர் அழுகல், நாற்றழுகல் மற்றும் வாடல் நோய்களை இது கட்டுப் படுத்துகிறது. இதை தவிர பயிர்களுக்கு தேவையான வளர்ச்சி ஊக்கிகளை (ஹார்மோன்) உற்பத்தி செய்கிறது. இதன் மூலம் வேரின் வளர்ச்சியை துரிதப்படுத்துவது மட்டுமல்லாமல் வேரின் செயல் திறனையும் அதிகரிக்கச் செய்கிறது. மண்ணில் உள்ள மக்காதக் குப்பைகளை எளிதாகவும், விரைவாகவும் மக்க வைப்பதில் இது முக்கியப் பங்கு வகிக்கிறது.

- இது சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்காத பாதுகாப்பான ஒன்றாகும்.
- இதனை எளிதான முறையில் பயன்படுத்தலாம்.
- இது மண்ணில் நன்றாக வளர்ந்து பயிர்களை நோய்களி லிருந்து பாதுகாக்கிறது.
- இதனை மற்ற அனைத்து உயிர் உரங்களுடன் கலந்துப் பயன்படுத்தலாம்.

## பயன்படுத்தும் முறைகள்

இதனை அடியுரமாகவும், விதை நேர்த்தி செய்தும் பயன் படுத்தலாம். அதே சமயத்தில் தண்ணீரில் கலந்தும் ஊற்றலாம்.

விதை நேர்த்தி - 4 கி/கிலோ விதை


மண்ணில் இடுதல் -2.5 கி. கி/ஹ

விதை நேர்த்தி செய்ய ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் டிரைக்கோ டெர்மா அஸ்பெரில்லம் எடுத்து கொண்டு நீர் தெளித்து கலந்து அரை மணி நேரம் நிழலில் உலர்த்தி பயன்படுத்தலாம். அல்லது ஆறிய அரிசி கஞ்சி 200 மில்லியில் கலந்து அரை மணி நேரம் நிழலில் உலர்த்தி பிறகு நடவு செய்யலாம். 2.5 கி.கி. டிரைக்கோ டெர்மா அஸ்பெரில்லத்தை50 கிலோ மக்கிய தொழு உரம் அல்லது மண்புழுஉரத்தில் கலந்து நிழலில் ஒரு வாரம் வைத்திருந்து பிறகு பயிர்களுக்குப் போடலாம். தண்ணீர் தெளித்து ஈரப்பதம் இருக்கு மாறு பார்த்துக் கொள்ளவும். இவ்வாறு இதனை மண்ணில் பயன் படுத்துவதன் மூலம் மண்ணில் உள்ள நன்மை தரக்கூடிய நுண்ணுயிரிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். ஒரு கிலோ டிரைக்கோடெர்மா அஸ்பெரில்லத்தை100 லிட்டர் தண்ணீரில் கலந்து செடிகளுக்கு ஊற்றி விடலாம்.

**தயாரிக்கும் முறை**

- சிறிய பாட்டில்களைக் கழுவிச் சுத்தமாகக் காயவைத்து எடுத்துக் கொள்ளவும்.
- ஒரு லிட்டர் தண்ணீருக்கு 50 கிராம் நாட்டு சர்க்கரை என்ற விகிதத்தில் கலந்து ஒரு பாட்டிலுக்கு 200 மில்லி வீதம் ஊற்ற வேண்டும்.
- பிறகு இவற்றில் கிருமிகள் இருந்தால் அவற்றை வெளியேற்ற 2 மணி நேரம் சூடேற்றவும்.
- அவை ஆறிய பிறகு எடுத்து வெளிப்புறம் உள்ள கிருமிகளை வெளியேற்ற Rs(UV) லிட்டில் வைக்கவும்.
- டிரைக்கோடெர்மா அஸ்பெரில்லம் தாய் வித்தை சிறிதளவு எடுத்து பாட்டிலில் போட்டு அவற்றைப்படுக்கை வசமாக வைக்க வேண்டும்.
- படுக்கை வசமாக வைப்பதால் பாட்டில் முழுவதும் டிரைக்கோ டெர்மா அஸ்பெரில்லம் வளர்ந்து விடும். இவ்வாறு படுக்கை வசமாக வைக்காவிடில் சர்க்கரைப் பாகு இருக்கும் அளவுக்கு தான் டிரைக்கோடெர்மா அஸ்பெரில்லம் வளரும்.
- டிரைக்கோடெர்மா அஸ்பெரில்லம் நன்கு வளர 7 நாட்கள் ஆகும். பிறகு அவற்றை எடுத்து மிக்ஸ்யில் ஊற்றி சிறிது நேரம் அரைக்க வேண்டும்.
- ஒரு பாட்டிலுக்கு 200 மில்லி டிரைக்கோடெர்மா அஸ் பெரில்லத்தில் 400 கிராம் டால்கம் பவுடரை கலந்து நிழலில் உலர்ந்த வேண்டும்.
- உலர்ந்தவற்றை எடுத்து சலித்து 1 கிலோ வீதம் எடுத்துச் சலித்து பாக்கெட் போட வேண்டும்.

**பரிந்துரைக்கப்படும் பயிர்களும் மற்றும் அதன் நோய்களும்**



**டிரைக்கோடெர்மா அஸ்பெரில்லம்**

**வேளாண் பயிர்கள்**

| பயிர் | நோய் |
|---|---|
| சோளம் | கரிக்கோல் அழுகல் நோய் (Charcoal rot) |
| மக்காச்சோளம் | கரிக்கோல் அழுகல் நோய் (Charcoal rot) |
| துவரை | வாடல் நோய், வேர் அழுகல் நோய் (Dry root rot) |
| உளுந்து | வேர் அழுகல் நோய் (Dry root rot) |
| தட்டைப்பயிறு | வேர் அழுகல் நோய் (Dry root rot) |
| பாசிப்பயறு | வேர் அழுகல் நோய் (Dry root rot) |
| கொண்டைக் | வாடல் நோய் (Fusarial wilt), கடலை வேர் அழுகல் நோய் (Dry root rot) |
| நிலக்கடலை | தண்டு அழுகல் நோய் |
| எள் | வாடல் நோய் (Fusarial wilt), வேர் அழுகல் நோய் (Dry root rot) |
| ஆமணக்கு | வாடல் நோய் (tem rot) |
| சூரியகாந்தி | கரிக்கோல் அழுகல் நோய் (Charcoal rot) |
| பருத்தி | வாடல் நோய் (Fusarial wilt), வேர் அழுகல் நோய் (Dry root rot) |

**தோட்டக் கலைப் பயிர்கள்**

| பயிர் | நோய் |
|---|---|
| தக்காளி | நாற்றழுகல் நோய் (Damping off), வாடல் நோய் (Fusarial wilt) |
| கத்தரி | நாற்றழுகல் நோய் (Damping off) |
| மிளகாய் | நாற்றழுகல் நோய் (Damping off) |
| மரவள்ளி | கிழங்கு அழுகல் நோய் (Tuber Rot) |
| வெங்காயம் | அடிதாள் அழுகல் நோய் (Basal rot) |
| மிளகு | வேர் அழுகல் (Foot Rot) |
| மஞ்சள் | வேர் தண்டு அழுகல் நோய் (Rhizome rot) |

| | |
|---|---|
| வெற்றிலை | வேர் அழுகல் (Dry root rot), கொடி அழுகல் நோய் (Stem rot) |
| தர்பூசணி | வாடல் நோய், திடீர் வாடல் நோய் (Fusarial wilt) |
| முட்டைக்கோஸ் | கருப்புக்கால் நோய், வேர் முடிச்சு நோய் (Root knot nematode) |
| தென்னை | அடித்தண்டழுகல் நோய் (Tanjore wilt), சாறு வடிதல் நோய் (Stem bleeding) |
| மல்லிகை | கழுத்தழுகல் மற்றும் வேர் அழுகல் நோய் (Collar rot & root rot) |

கட்டுரையாளர்கள் : கு.விக்னேஷ், உதவிப் பேராசிரியர் – தாவர நோயியல் துறை, பாலாறு வேளாண்மைக் கல்லூரி, ஆம்பூர் – 635 805, தொடர்பு எண் : 82488 33079. மின்னஞ்சல் : lakshmikumar5472@gmail.com, பா.தமிழ்செல்வன், திட்ட உதவியாளர், ICAR - KVK, கரூர், கோ.அர்ஷா, உதவிப் பேராசிரியர் – தாவர நோயியல் துறை, பாலாறு வேளாண்மைக் கல்லூரி, ஆம்பூர் – 635 805.

பைட்டோவிட்டா (FYTOVITA)

Stanes

“வைட்டமின் சத்துக்களைக் கொண்ட பயிர் ஊக்கி”

பயன்கள்

- வளர்ச்சி மற்றும் பூக்கும் தருணத்தில் பைட்டோவிட்டா தெளிப்பதால், பூக்கள் அதிகம் உருவாகுவதற்கும், மலரும் பூக்கள் உதிராமலும், மேலும் பிஞ்சுகளாக மாறவும் வழி செய்கிறது
- அனைத்துப் பயிர்களின் விளை பொருட்களில் உள்ள திசுக்கள் திடப்படுவதனால் எடை அதிகரித்து கூடுதல் லாபம் கிடைக்கிறது

பயன்படுத்தும் முறை

ஏக்கருக்கு 500 மில்லி (அ) 5 மில்லி அளவை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்)




84899 04949, 84899 10105

மேலும் விபரங்களுக்கு: www.tstanes.com

# வேளாண் பல்கலை உழவர் தின விழாவிற்கு பட்டறிவு பயணம்

திண்டுக்கல், செப்.28

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் வட்டம், அட்மா திட்டத்தின் கீழ் மாநிலத்திற்குள்ளான விவசாயிகள் பட்டறிவு பயணத்தை வேளாண்மை உதவி இயக்குநர் சந்திரமோகன் துவக்கி வைத்தார். இப்பயணத்தில் விவசாயிகள் கலந்து கொண்டு கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் நடத்தும் உழவர் தின விழாவில் வைக்கப்பட்டிருந்த கண்காட்சியில் சோலார் லைட் டிராப், சோலார் மூலம் இயங்கும் மோட்டார் மற்றும் குழி எடுக்க பயன்படும் இயந்திரம், தேங்காய் உரிக்கும் இயந்திரம், மலைத்தேன் வகைகள், சிறுதானிய விதைகள், பண்ணை கருவிகள், சிறுதானிய செயல் விளக்கத்தோடு சிறப்பாக அமைந்த சாமை, குதிரைவாலி, கம்பு, கேழ்வரகு, பணி வரகு, சோளம் ஆகிய புதிய ரகங்கள் பார்த்தும் அதன் சாகுபடி தொழில்நுட்பங்களை கேட்டும் தெரிந்து கொண்டனர். இது தவிர பச்சை நிற கடல் பாசிகள், சிப்பி காளான் வளர்ப்பு, மல்பெரி புழு வளர்ப்பு பருவங்கள் போன்றவற்றை விவசாயிகள் பார்த்து அதன் சாகுபடி முறைகளை கேட்டு தெரிந்து கொண்டனர். இப்பயணத்திற்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுகன்யா உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பொன் தமிழரசு மற்றும் அருண்குமார் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

## விவசாயிகளுக்கு ஆமணக்கு விதைகள் வழங்கப்படுகிறது

நாமக்கல், செப்.28

நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் தொகுப்பு முதல்நிலை செயல் விளக்க திடல் 2024-25 பருவத்திற்கான ஆமணக்கு விதைகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆமணக்கு (ஏத்தாப்பூர் 2) சாகுபடி செய்யும் விவசாயிகள் விதைகளைப் பெற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம். மேலும் இத்திட்டத்திற்கு ஒரு கிராமத்தில் குறைந்தது ஐந்து விவசாயிகள் இருத்தல் அவசியமாகும். மேலும் விதைகளை வாங்க வரும் விவசாயிகள் தங்களுடைய புகைப்படம், ஆதார் நகல் மற்றும் கம்ப்யூட்டர் சிட்டா நகல் ஆகியவை கொண்டு வருமாறு கேட்டுக்கொள்கிறோம். மேலும் தொடர்புக்கு முனைவர் சி.சங்கர், உதவிப் பேராசிரியர் (பூச்சியியல்) 99430-08802 தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு, நாமக்கல், வேளாண்மை அறிவியல் நிலையம், பேராசிரியர் மற்றும் தலைவர் தெரிவித்தார்.


நானோ யூரியா பிளஸ்
20 சதவீதம்
தழைச்சத்து கொண்ட நானோ திரவம்
500 மிலி
ரூ.225/-
IFFCO
NANO
UREA
PLUS
இலைவழி
தெளிப்பு
1லி. நீருக்கு
5 மி.லி
ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி
பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

# பருத்தியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்து பின்னமங்கலம் கிராம விவசாயிகளுக்கு பயிற்சி

கிருஷ்ணகிரி, செப்.28

கிருஷ்ணகிரி மாவட்டம் தளி வட்டாரத்தில் வேளாண்மைத் துறையின் மூலம் மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் (அட்மா) 2024-25-ம் ஆண்டிற்கான பின்னமங்கலம் கிராமத்தில் பருத்தியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பற்றி விவசாயிகளுக்கு உள் மாவட் டஅளவிலான ஒரு நாள் பயிற்சி நடத்தப்பட்டது.

வேளாண்மை துணை இயக்குநர் (உழவர் பயிற்சி நிலையம்), கிருஷ்ணகிரி, மண் வளத்தைபாதுகாக்க இயற்கை உரங்கள் இடுவது குறித்தும், மண்வளத்தை பாதுகாக்க தக்கைப்பூண்டு இடுவதன் அவசியம் குறித்தும் விளக்கினார். மண்பரிசோதனை யின் முக்கியத்துவம், மண்ணில் உள்ள பேரூட்ட சத்துகள் பயன் பாடுகள் குறித்தும் விவசாயிகளுக்கு விரிவாக கூறினார். மேலும் ஆடு வளர்ப்பு, மாடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, பண்ணை குட் டை அமைத்து மீன் வளர்ப்பு போன்ற ஒரு புதிய அணுகுமுறை தேவைப்படுகிறது என்றும் பண்ணைப் பொருட்கள், பண்ணைக் கழிவுகளை சிறிய முறையில் சுழற்சி செய்தல், பண்ணையி லிருந்து கிடைக்கும் கழிவு பொருட்களை மீண்டும் வயலில் இட்டு நிலத்தின் வளம், மகசூலை பெருக்குவதோடு, உரச்செலவுகளை குறைப்பது குறித்தும் விவசாயிகளுக்கு விரிவாக கூறினார்.

வேளாண்மை உதவி இயக்குநர், தளி சி.முருகன் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பற்றியும் தரமான விதைகளை தேர்ந்தெடுத்து விதை நேர்த்தி செய்து விதைகளை விதைப்பதன் மூலம் பயிர் விளைச்சலை அதிகப்படுத்தலாம் எனவும் சிறுதானிய சாகுபடியை பெருக்கவும், சாகுபடி செலவை குறைத்து அதிக வருவாய் ஈட்டவும் மற்றும் கூட்டு பண்ணையத்தின் மூலம் கடன் வசதிகள் மற்றும் சந்தைபடுத்துதல் பற்றியும் கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சி திட்டத்தின் மூலம் கொடுக்கப்படும் இடு பொருள் கள், மானியத் திட்டங்கள் பற்றியும், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மண்ணுயிர் காப்போம் திட்டம் குறித்தும், பசுந்தாள் உர பயன்பாடு, இயற்கை வேளாண்மை ஊக்குவிக்கும் வகையில், மானியத் திட்டங்கள், உயிர் உரங்களின் பயன்பாடுகள் குறித்தும் விளக்கமளித்தார். விவசாயிகளுக்கு விரிவாக கூறினார். உதவி தோட்டக்கலை அலுவலர் ஸ்ரீதர் கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சி திட்டத்தின் மூலம் கொடுக்கப்படும் இடு பொருள் கள், மானியத் திட்டங்கள் பற்றியும், தோட்டக்கலைத் துறையில்

கொடுக்கப்படும் மானியத் திட்டங்கள் பற்றியும் கூறினார். ஊராட்சி மன்ற தலைவர் நவீன் கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சி திட்டத்தின் மூலம் விவசாயிகள் அனைவரும் பயன் பெறுமாறு கேட்டுக் கொண்டார். உதவி தொழில்நுட்ப மேலாளர் ர.சிந்தனா அட்மா திட்டத்தின் செயல்பாடுகள் குறித்தும் உழவன் செயலியை பயன்படுத்தும் முறைகள் மற்றும் சிறு தானியங்களின் பயன்பாடுகள், இயற்கை உரங்களான பஞ்சகாவ்யா, இயற்கை பூச்சி விரட்டி, மீன் அமிலம், ஜீவாமிர்தம், கனஜீவாமிர்தம், அமிர்த கரைசல் ஆகியவற்றின் பயன்பாடுகள் குறித்து விவசாயிகளுக்கு கூறினார். இப்பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு சிறுதானியங்கள் மற்றும் துவரை சாகுபடி தொழில்நுட்ப துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டன.



# கொளத்தூர் வட்டாரத்தில் உழவர் திரள் பெருவிழா



சேலம், செப்.28

சேலம் மாவட்டம், கொளத்தூர் வட்டாரத்தில் மூலக்காடு கிராமத்தில் உக்கம்பருத்தி காடு பகுதியில் அட்மா திட்டத்தின் கீழ் உழவர் திரள் பெருவிழா குறித்த விவசாயிகள் கருத்தரங்கு கொளத்தூர் வேளாண்மை உதவி இயக்குனர் ராஜகோபால் தலைமையில் நடைபெற்றது.

கோ.லோகநாதன், துணை வேளாண்மை அலுவலர், கொளத்தூர், வேளாண் துறை திட்டங்கள் குறித்தும், பார்த்தீனியம் ஒழிப்பு குறித்தும் விரிவாக பேசினார். பி.எஸ். நடராஜன், உதவி செயற்பொறியாளர், கொளத்தூர், வேளாண் பொறியியல் துறை சார்ந்த திட்டங்கள் குறித்தும், திவ்யபாரதி, கால்நடை உதவி மருத்துவர், கொளத்தூர், கால்நடை பராமரிப்புத் துறை திட்டங்கள் குறித்தும், மோகனா, உதவி வேளாண்மை அலுவலர், மேட்டூர், வேளாண் வணிகம் மற்றும் விற்பனை துறை திட்டங்கள் குறித்தும், கார்த்திக், உதவி தோட்டக்கலை அலுவலர், கொளத்தூர், தோட்டக்கலை சார்ந்த திட்டங்கள் குறித்தும் பேசினார்.

பயிற்சியில் உயிர் உரங்கள், உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள், விதைகள், நுண்ணூட்டங்கள், டிராக்டர், மினி டிராக்டர், மருந்து தெளிக்கும் கருவிகள், களை எடுக்கும் கருவிகள் ஆகியவை விவசாயிகள் பார்வையிட கருத்துக்காட்சி அமைக்கப்பட்டிருந்தது.

இப்பயிற்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் இந்துமதி, வட்டார தொழில்நுட்ப மேலாளர்,சிவக்குமார், கமலக்கண்ணன் உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் செய்திருந்தார்கள்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# பொன்னமராவதி காரையூரில் உயிர்ம வேளாண்மை கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி

புதுக்கோட்டை, செப்.28

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டாரத்தில், வேளாண்மை துறையின் சார்பில் உயிர்ம வேளாண்மை கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி நடைபெற்றது. ஸ்டாமின் இயக்குனர் சங்கரலிங்கம்,வேளாண்மை துணை இயக்குனர் மத்திய திட்டம் செல்வி,வேளாண்மைதுணை இயக்குனர் நுண்ணீர் பாசனம் ஆதிசாமி, இலுப்பூர் வருவாய் கோட்டாசியர் அக்பர் அலி, வட்டாசியர் சாந்தா, சுதா அடைக்கலமணி ஒன்றிய குழுத் தலைவர், அட்மா கமிட்டி தலைவர் திருப்பதி ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

பொன்னமராவதி வட்டாரத்தில் வேளாண்மைதுறையின் சார்பில் பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உயிர்ம வேளாண்மை கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி காரையூரில் நடைபெற்றது. ஸ்டாமின் இயக்குனர் சங்கரலிங்கம் தலைமை வகித்தார். வேளாண்மைதுணை இயக்குனர் மத்திய திட்டம் செல்வி மற்றும் வேளாண்மை துணை இயக்குனர் நுண்ணீர் பாசனம் ஆதி சாமி முன்னிலை வகித்தனர். பின்னர் விவசாயிகளுக்கு துவரை சாகுபடி திட்டத்தின் கீழ் துவரை தொகுப்பும், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் உயிரி பூச்சிக்கொல்லி பண்புடைய ஆடாதொடா மற்றும் நொச்சி கன்று களும்,வேளாண் காடுகள் திட்டத்தின் கீழ் தேக்கு, மகாகனி, செம்மரம் மரக்கன்றுகளும், நுண்ணீர் பாசனத் திட்டத்தின் கீழ் மழைத்தூவானும் ஸ்டாமின் இயக்குநர் சங்கரலிங்கம் விவசாயிகளுக்கு வழங்கினார்.

இதேபோல், உயிர்ம வேளாண்மை குறித்து முனைவர் ஜெய சீனிவாசன் மற்றும் முனைவர் திருவேங்கடம், உயிர்ம வேளாண்மையில் பின்பற்றப்படும் தொழில் நுட்பங்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்தனர். முன்னோடி விவசாயிகளான சிங்காரம், கலையழகன், சிவராமன் உயிர்ம வேளாண்மையில் தங்களது அனுபவங்களையும் தங்களது நிலங்களில் கடைபிடிக்கும் யுக்தி முறைகளையும் பகிர்ந்தனர். வேளாண்மை துறை, தோட்டக்கலை துறை, வேளாண் வணிகம் மற்றும் விற்பனைத் துறை, வேளாண் பொறியியல் துறை, உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் மூலம் பல்வேறு அரங்குகள் அமைக்கப்பட்டது. பொன்னமராவதி வட்டாரத்திலிருந்து 200க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். மேலும், முடிவில் வேளாண்மை உதவி இயக்குநர் ரஹ்மத் நிசா பேகம் நன்றி கூறினார்.

# சிறுதானிய பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை மற்றும் மதிப்புக்கூட்டுதல் குறித்த வெளி மாநில அளவிலான கண்டுனர் பயணம்

மதுரை, செப்.28

மதுரை மாவட்டம், சேடபட்டி வட்டாரம், வேளாண்மை துறையின் கீழ் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டம் (ATMA 2024-25) –சிறுதானியம் பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை மற்றும் மதிப்புகூட்டுதல் குறித்த கண்டுணர் பயணத்திற்கு சேடபட்டி, அலங்காநல்லூர், கொட்டாம்பட்டி வட்டாரங் களிலிருந்து 20 விவசாயிகளை Indian Institute of Oilseeds Research, Indian Institute of Maize Research, Hyderabad அழைத்து செல்லப்பட்டனர்.

இப்பயிற்சியில் வட்டார ஒருங்கிணைப்பாளர் இரா.இராமசாமி விவசாயிகளை வழியனுப்பி வைத்தார். Indian Institute of Oilseeds Research, Indian Institute of Maize Research, Hyderabad-ல் நடைபெற்ற சிறுதானிய பயிர்கள் துறையின் பேராசிரியர் ஹேமா சங்கர் விவசாயிகளுக்கு சிறு தானியங்களின் முக்கியத்துவங்கள் பற்றியும் மதிப்புகூட்டி எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றியும் தெளிவாக எடுத்து கூறினார். சிறுதானிய பயிர்களான சாமை, குதிரைவாலி, தினை, வரகு, மக்காசோளம், சோளம், கம்பு போன்ற பயிர்களின் சாகுபடி தொழில்நுட்பங்கள் விளக்கப்பட்டு, சிறுதானிய பயிர்களின் ஏற்படுகின்ற நோய் மற்றும் பூச்சிகள் பற்றி பூச்சியியல் துறை பேராசிரியர்களால் விவசாயிகளுக்கு விரிவாக எடுத்து சொல்லப்பட்டது.

நெல் அறுடைக்கு பின் சிறுதானியங்களை பயிரிட்டு மகசூல் எடுக்கும் விதங்கள் மற்றும் உரம், நீர் மேலாண்மை குறித்தும் எடுத்துக் கூறப்பட்டது. சிறுதானிய பயிர்களில் மதிப்புகூட்டி விற்பனை செய்யும் பொருட்களை எவ்வாறு தயாரிப்பது குறித்தும், தயார் செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்வது குறித்தும் மற்றும் மதிப்புகூட்டப்பட்ட பொருட்களை விவசாயிகளின் பார்வைக்கு செயல்விளக்கமாக காண்பிக்கப்பட்டது. தயார் செய்யும் இயந்திரங்கள் மானியம் பற்றியும் விரிவாக எடுத்துக்கூறப்பட்டது.

இப்பயிற்சிகான ஏற்பாடுகளை அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் ச.கணேசராஜா உதவி தொழில்நுட்ப மேலாளர் த.பிரித்தி விராஜன் ஆகியோர் ஏற்பாடுகளை மிகச்சிறப்பாக செய்திருந்தனர்.